/ 22.4.87. சிதம்பரம்

நகல் – I

நகல்

228

(சிதம்பரம்——) பக்.1
(சென்னை)

சிவமயம்

மகா-ள-ள-ஸ்ரீ. உ. V. சாமிநாத ஐயரவர்கள் சமுகத்திற்கு மிகவும் வணக்கத்துடன் தெரிவிப்பதென்னவென்றால், தாங்களிப்போது அச்சிட்டுவரும் ஜீவக சிந்தாமணியில் முத்தியிலம்பகம் 300 பாடல் வரைக்கும் அச்சிட்டாயிருப்பதாகக் கேள்விப்பட்டு மெத்த சந்தோஷப்பட்டேன். வெகுகாலமாயச்சிடாமலிருந்த யிக்காவியத்தை தாங்கள் முயன்று அச்சிட்டது வெகு நன்மையான காரியம்.

Rev. ~~Bower~~ Bower 1868 வருஷம் நாமகளிலம்பகமாத்திரம் அச்சிட்டிருக்கிறார். அதில் சமணசமய வரலாறு முதலியவற்றைக் குறித்து ஒருபக்கம் யிங்கிலீஷிலும் மற்றப் பக்கம் தமிழிலுமாக அச்சிட்டிருக்கிறார். அதைத் தாங்களும் பார்த்திருப்பீர்களென்று நம்புகிறேன். அப்படி பார்த்திராவிட்டால் என்னுடைய புத்தகத்தைத் தங்களுக்கு அனுப்புவேன். அதுபோல தங்கள் புத்தகத்திலும் அதைப் பதிப்பித்தால் அப்புத்தகத்திற்கு அணியாகவிருக்கும்.

நச்சினார்க்கினியருரையை முறிடி சாஸ்திரம் ஐயரவர்கள் திருத்தியெழுதிக் கொடுத்ததை Rev. W. Bower அச்சிட்டதாகச் சொல்லுகிறார். தாங்களச்சிட்டு வருவது அவ்வுரையேயென்று நம்பியிருக்கிறேன். மா-ள-ள-ஸ்ரீ சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் யெனக்குத் தன்னுடைய கையெழுத்துப் பிரதிகளில் ஒ யெனக்குக் கொடுத்தார். அதை நான் நன்றாய்ப் பார்த்தேன். அதை முற்றிலும் அவரிடமில்லை. தங்களுடைய புத்தகத்துக்கு அந்தப் பிரபல ஸாத்துவானுடைய சிபாரிசுமிருந்தால் மிக நன்மை. ம-ள-ள-ஸ்ரீ. அஷ்டாவதானம் சுப்பராய செட்டியாரவர்கள் தங்களைக் குறித்தும் தாங்களச்சிடும் சிந்தாமணியைக் குறித்தும் யென்னிடம் விசேஷமாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால் யெனக்கு அதில் ஒரு புத்தகம் வாங்க மெத்த ஆவலாயிருக்கிறேன். யிப்போது யெனக்குத் தாங்கள் செய்யவேண்டிய பேருதவி யாதென்றால் தங்களுடைய கடைசி proof ஒன்றை ஒரு வசமாய் யெனக்கு அனுப்பினால் நான் யென்னிடமிருக்கும் Rev. Bower னுடைய புத்தகத்துடன் வைத்துப் பார்த்து யிதற்கும் தாங்களச்சிடும் புத்தகத்திற்கும் யிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை காணவிருக்கிறேன். ம-ள-ள-ஸ்ரீ அஷ்டாவதானம் சுப்பராய செட்டியாரவர்களால் தங்கள் புத்தகம்

in

p. 284-87.
g. 8. Vol E

(சிதம்பரம் பக் 2)

Mr. Bower புத்தகத்திலும் மேலானதாயிருக்குமென்றே யென்னிடம் சொன்னார். அதையச்சிட வெகு நாட் செல்லுமென்று நான் நினைக்கிறேன். தாங்கள் வெகுசீக்கிரத்திலச்சிட்டது மெத்த சந்தோஷம். நான் கேட்டுக்கொண்டபடியே தாங்கள் தயவுசெய்து தங்களுக்கு சம்மதியான Proof யென்றைக்காவது அனுப்பினால் அவருக்குக் கூலி கொடுத்துவிடுவேன். தங்கள் Proof ஐயும் தங்களுக்கு அனுப்பிவிடுவேன். மன்னிக்கவும்

தங்களடிமை,
P. சிதம்பரம்.

22/4/87/

தாங்கள் தயவுசெய்து யெனக்கு கடிதமெழுதினால் மேல்விலாசம் யெழுதும் வரம் அடியில் கண்டிருக்கிறேன்.

யெனக்கு அனுகூலமான சமாச்சாரம் தாங்கள் தயவுசெய்வீர்களென்றே யெதிர் பார்க்கிறேன். நான் யெழுதிய கடிதத்தில் பிழையிருந்தாலதைப் பொறுத்து யென்னை மன்னிக்கக் கோருகிறேன்.

P Sethambaram

Writer

Agri Horticultural society,

Tenampet

Madras

ரைட்டர் அக்ரிகல் ஹார்ட்டிகல்சரல் சொசைட்டி. தேனாம் பேட்டை. மெட்ராஸ்.

ஞ✓

P. சிதம்பரம் . . . . . .

சென்னை

௨௨-4-௪௭.

---

௨ · பக் ·

சிந்தாமணி புரூப் அனுப்ப வேணும்.

Pages 284 - 287.

த. க. VOL E

(58)